**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.53/2025 - PW- 8**

| | |
|---|---|
| Name | செல்வி. கவிதா |
| Father Name | பாலகிருஷ்ணன் |
| Village /Area | கிழவனம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | பள்ளி மாணவி |
| Age | 13 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 30.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சாட்சி இளவர் என்பதால் இந்த நீதிமன்றத்தில் கீழ்கண்ட வினாக்கள் எழுப்பட்டது. நான் 9–ம் வகுப்பு திருத்தணி பெண்கள் உயர்நிலை பள்ளியில் படிக்கிறேன். நான் என்ன காரணத்திற்காக இந்த நீதிமன்றத்திற்கு ஆஜராகியுள்ளேன் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். நான் இந்த நீதிமன்றத்திற்கு எனது சித்தப்பா சந்திரன் கொலை செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமான சாட்சி அளிக்க வந்துள்ளேன். ஆஜர் எதிரிகள் தான் என் சித்தப்பாவை கொலை செய்தவர்கள். சாட்சியிடம் இந்த நீதிமன்றத்திற்கு என்ன காரணத்திற்காக வந்துள்ளார் என்பது பற்றி விளக்கி கூறிய பிறகு சாட்சியினுடைய முதல் விஎன்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி தான் எதிரி எத்திராஜ் மற்றும் சரவணன் என் கொழந்தனாரின் தலையில் வெட்ட பயன்படுத்திய கத்தியாகும் அது ஏற்கனவே சா.பொ.1

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கல்லால் தான் எதிரி சுப்பிரமணி என் கொழுந்தனாரின் தலையில் தூக்கி போட்டு கொலைசெய்தார். அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாரணை பதிவு செய்யப்பட்டது.

இறந்த சந்திரன் என்னுடைய சித்தப்பா ஆவார். அசா.1 என்னுடைய சித்தி, அசா.2 என்னுடைய அப்பா, அசா.7 என்னுடைய அம்மா ஆவார். கடந்த 05.09.2024 அன்று மாலை 04.30 மணிளயவில் நானும் என் அண்ணன் பெருமாளும் பள்ளி அருகே நின்றுக்கொண்டிருந்தோம். அப்போது என்னுடைய சித்தப்பா சந்திரன் வேலை செய்த கூலியை பெறுவதற்காக பி.என். கண்டிகைக்கு சென்று வரும் போது கீதாவும் அவரது மகன் ஆகாஷும் என் சித்தப்பா சந்திரனின் சட்டையை பிடித்து அசிங்கமான வார்த்தைகாளல் திட்டினார்.

பிறகு எத்திராஜ் என்பவர் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து என் சித்தப்பா சந்திரனின் இடது உள்ளங்கையில் வெட்டி கல்லின் மீது தள்ளி தலையில் வெட்டினார். பிறகு எனது சின்ன தாத்தா சுப்பரமணி கல்லை தூக்கி என் சித்தப்பாவின் தலையின் மீது போட்டார். பிறகு எதிரி சரவணனும் கல்லை தூக்கி என் சித்தப்பாவின் தலையின் மீது போட்டு மறுபடியும் என் சித்தப்பாவின் தலையில் வெட்டினார்.

பிறகு சுப்பிரமணி என்பவர் நடிக்கீறியாடா என்று கூறி மறுபடியும் கல்லை தூக்கி என் சித்தப்பாவின் தலையின் மீது போட்டார். அதே கல்லை சரவணன் எடுத்து சந்திரனின் கால் மற்றும் கையின் மீது போட்டார். காயம் அடைந்த என் சித்தப்பா சந்திரனை என் அப்பா, அம்மா, பெரியப்பா அனைவரும் சேர்ந்து திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்த மருத்துவர் என் சித்தப்பா

சந்திரன் இறந்துவிட்டதாக கூறினர். மேற்படி இறந்த சந்திரன் எனது அப்பாவினுடைய தம்பி ஆவார்.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி தான் எதிரி எத்திராஜ் மற்றும் சரவணன் என் சித்தப்பா தலையில் வெட்ட பயன்படுத்திய கத்தியாகும் அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கல்லால் தான் எதிரி சுப்பிரமணி என் சித்தப்பா தலையில் தூக்கி போட்டு கொலை செய்தார். அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.30 19:06:06 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.